யோகம் இருக்கிறது - குந்தவை

Written by இரா.முருகன்
Thursday, 14 April 2016 05:15 - Last Updated Thursday, 14 April 2016 05:36

நண்பர் லண்டன் பத்மநாப ஐயர் புண்ணியத்தில் குந்தவை என்ற அருமையான ஈழத் தமிழ் எழுத்தாளரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. குந்தவையின் 'யோகம் இருக்கிறது' சிறுகதைத் தொகுப்பு ஆர அமரப் படித்து அசை போடப்பட வேண்டிய ஒன்று. அத்தி பூத்தாற்போல் எழுதும் குந்தவை (இயற்பெயர் சடாட்சரதேவி) புலம் பெயராத ஈழ எழுத்தாளர். அவர் கதைகளுக்கு அசாத்திய வலிமை சேர்க்க இந்த ஒன்றே போதும். அகதியாக ஆயிரக் கணக்கான காதம் தள்ளி உட்கார்ந்து கொண்டு, இழப்பைப் பற்றிக் கழிவிரக்கத்தோடும் தன்னிரக்கத்தோடும் கதைப்பவை இல்லை அவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில், பிறந்த மண்ணை விட்டு வெளியேறாமல் அங்கேயே இருந்து நிகழ்த்தும் பதிவுகள் குந்தவையின் கதைகள். முந்திய வாக்கியத்தை நேரடியாக வாசிக்காமல், புலம் பெயர்ந்த ஈழ எழுத்தாளர்கள் பற்றிய ஒரு தமிழக எழுத்தாளரின் கருத்து என்று உள்வரியை வலிந்து நுழைத்துப் படிப்பவர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை.

"யுத்த பூமியை விட்டு அலறி அடித்துக் கொண்டு வெளியேறாது மண்ணின் நேசிப்புடன் மக்கள் துயரங்களைப் பங்கிடும் ஒருத்தியாய் வாழ்ந்த நேர்மையினால், குந்தவையின் கதைகள் இரண்டு தசாப்த காலத் தமிழ் ஈழத்தின் உண்மையான

1 / 4



யோகம் இருக்கிறது - குந்தவை

Written by இரா.முருகன்
Thursday, 14 April 2016 05:15 - Last Updated Thursday, 14 April 2016 05:36

வரலாறாகப் பதிவாகிறது" என்று எஸ்.பொ தன் முன்னுரையில் (எஸ்.பொவின் மித்ரா பதிப்பக வெளியீடு இந்தப் புத்தகம்) குறிப்பிடுவது நூறு சதவீதம் உண்மை.

எனக்குப் படிக்கக் கிடைத்தவரையில் வழமையானதாகப் படும் ஈழத் தமிழ் மன இயக்கத்துக்கும் எழுத்து நடைக்கும் மாறான (எஸ்.பொ, முத்துலிங்கம் போன்ற விதிவிலக்குகள் தவிர்த்து) அடங்கி ஒலிக்கும் குரலும், போர் மறுப்புத் தொனியும் எல்லாவற்றையும் விட முக்கியமான பெண்ணியப் பார்வையுமாக (இது பெண்ணியம் கூட இல்லை - தாயியம்) எழுதும் குந்தவை குறைந்த சொற்களில் கதை நடத்திப் போகிறார்.கதை நிகழ்வில் ஆசிரியரின் குறுக்கீடு ஒரு பிரகடனமாகவோ, விமர்சனமாகவோ, எள்ளலாகவோ குறைந்த பட்சம் வாக்கிய முடிவில் ஆச்சரியக் குறியாகவோகூட இல்லாத அதிசயம்தான் குந்தவை கதைகள ஆழ்ந்து படிக்க வைக்கிறது.

'பெயர்வு' என்று அற்புதமான ஒரு கதை.

போர் நடக்கும் பூமியிலிருந்து வெளியேறிக் கடலில் படகில் பல மணி நேரம் பயணம் செய்து இடம் பெயரும் இளம் தம்பதிகள், அவர்களுடைய குழந்தை பற்றிய கதை இது.

'எல்லாவற்றையும் அப்படியே போட்டது போட்டபடி விட்டு ஓடி வந்தாகி விட்டது.

வீட்டை விட்டு வெளியே வந்தபின், ஒரு இரவு கூட ஒழுங்காக நித்திரை என்ற ஒன்றில்லை. அதுவும் நேற்றிரவு ஒரு கண் மூடவில்லை.

படுக்கக் கிடைத்த இடம் ஒரு பள்ளிக்கூட மண்டபம். நித்திரை கொண்டிருக்கலாம். முடியவில்லை. வரும் வழியில் கைதடிப் பாலத்தைக் கடக்கையில் பாலத்தின் கீழ் நிறைந்திருந்த நீரில் மிதந்த குழந்தையின் உடல் சிற்றலைகளால் அலைப்புண்டதுபோல் அவள் நினைவிலும் அலைப்புண்டது. அதோடு, கைப்பிடிச் சுவரோடு, நாலு பேரின் கைத்தாங்கலுக்குள் திமிறிக் கொண்டு அரற்றிய அந்தத் தாயின் கதறல். பாவி. ஏன் இடுப்புக் குழந்தையைத் தவற விட்ட்டாள்? பாலத்தின் மேல் நடக்கையில் களைத்து விழுந்தாளோ? நெரிசலில் சிக்குண்டு கை தவற விட்டாளா?

படகின் மறு மூலையிலிருந்து ஒரு குழந்தை வீரிட்டுக் கத்துவது கேட்டது.

2 / 4

யோகம் இருக்கிறது - குந்தவை

Written by இரா.முருகன்
Thursday, 14 April 2016 05:15 - Last Updated Thursday, 14 April 2016 05:36

தொடர்ந்து தாயின் சமாதானப்படுத்த முயலும் குரலும் கேட்டது.

சிவரஞ்சனி தன் மடியிலிருந்த அமுதனைத் தடவிக் கொடுத்தாள். அவனின் ஈரம் வழியும் உடலில் நீரை வழித்து விடும்போதெல்லாம் அவனுக்குக் காய்ச்சல் கீச்சல் வரக்கூடாதே என்று உள்ளுர அங்கலாய்ப்பாக இருந்தது.

கடல், படகு தன் உடம்பை படகு கிழித்துச் செல்வது பொறுக்காதது போல வாரித் தூற்றி இரைந்து கொண்டிருந்தது. படகில் இருந்தவர்கள் ஒவ்வொரு வாரியடிப்பிற்கும் உடல் கொடுத்து நனைந்த வண்ணம் இருந்தனர்.

முதலில் இந்த அலையடிப்பிற்குள் சிலிர்த்து சந்தோஷமாகச் சிரித்த அமுதன் கூட இப்பொழுது சோர்ந்து விட்டிருந்தான். பசிக் களைப்பு வேறு"

உலர்ந்து போன பன். குழந்தை சாதாரணமாகச் சாப்பிடாது அதை. பணியாரம் சாப்பிட்டுப் பழகிய அந்த மழலை பசி பொறுக்க முடியாமல், 'அம்மா, பாண் கொடுங்கோ' என்று கேட்கிறது. அம்மா மனம் உடைந்து போகிறாள். பன்னைக் கிழித்துக் குழந்தைக்கு ஊட்டும்போது பின்னால் இருந்து யாரோ பார்ப்பதுபோல் தோன்ற திரும்புகிறாள். பசித்த இன்னொரு குழந்தை ஏக்கத்தோடு அவளைப் பார்க்கிறது. பன்னின் இரண்டு துண்டங்களைப் பிய்த்து அந்தக் குழந்தையிடமும் நீட்டுகிறாள் இந்தத் தாய்.

குந்தவை என்ற ஒரு தாய் எழுதிய இந்தக் கதை போர்ப் பிரச்சாரம் செய்யும் எந்தக் கதையையும் விட உன்னதமானது. சர்வ தேசியத் தன்மை உண்டு இந்தத் தாய்மை எழுத்துக்கு.

விட்டுவிட்டு வந்த வீடு போரில் அழிகிறது. பஸ்ஸில் பயணம் செய்து அங்கே மீண்டும் போகிறாள் ஒருபெண். அவள் பார்வையில் அந்தப் பயணம் காட்சி ரூபமாக விரியும் கதை "வீடு நோக்கி".

"வீதியோரக் காட்டுச் செடிகள் சில வளைந்து நின்று, பஸ் சன்னலால் உள்ளே தலை நீட்டிப் பார்த்து, விருட்டென்று மறைந்தன. பஸ்ஸைப் போக விட்டு, அதன் முதுகில் 'படபட' எனத் தட்டி வழி அனுப்பின. .... முன்பெல்லாம் கிணறுகளுக்கு அருகே பம்பு

3 / 4

யோகம் இருக்கிறது - குந்தவை

Written by இரா.முருகன்
Thursday, 14 April 2016 05:15 - Last Updated Thursday, 14 April 2016 05:36

நீர் குழாய் வழியாகப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருக்கும். வாய்க்கால் வழியோடித் தரைகளை நிறைக்கும்.... புகையிலையோ, வெங்காயமோ கிண்டி எடுத்த பின்னும் கிணற்றடிகளைச் சுற்றி ஈரப்படை இருக்கும். அவற்றைச் செவலையும், கறுப்புமாய் மாடுகள் வந்து வந்து கூட்டமாய் மேயும். அவை புற்களை இழுக்கையில் வெளிப்படும் பூச்சிகளைப் பிடிக்க என மாடுகளைச் சுற்றி நிற்கும் வெள்ளைக் கொக்குகள் மாடுகளின் நகர்விற்கேற்பத் தாமும் நகர்ந்து நகர்ந்து செல்லும் ... இப்பொழுது அவை ஒன்றுமில்லை. வரம்பு அழிந்து வெடித்த வயல் வெளிதான். எங்கும் தூரத்தில் வயல்களுக்கு வரம்பு கட்டுவது போல் நிற்கும் பனைவடலிகளும் இன்றில்லை. ஓலைத்தரை விரித்த பனைகள் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகத் தெரிந்தன. கண்ணில் பட்ட மற்றவை யாவும் எரிந்து முறிந்து போய்ப் பாதியாக நின்றன".

போய்ச் சேர்ந்த வீட்டில் போரின் எச்சமாகத் தங்கிக் கிடந்த கண்ணிவெடி மடித்து அவள் இறப்பதில் முடியும் கதை இது. போரின் எச்சங்கள் இம்மாதிரிப் பாவப்பட்ட மக்கள்தான், யார் ஜெயித்தாலும் யார் தோற்றாலும் இழக்கப்படுவது மலினப்படுத்தப்பட்ட மனித உயிர்கள் தான் என்று சொல்லாமல் சொல்லுகிறார் குந்தவை.

"நீருக்குள் இறங்கிய பொழுதும் கால் தடுமாறிக் கொண்டு வந்தது. படகின் வெளிப்புறத்தைப் பற்றிக் கொண்டு கால்களை நீருக்குள் அழுத்த ஊன்றிச் சமாளித்தாள். மன்ண்ணை அரித்துக் கொண்டு ஓடிய நீர் பித்த வெடிப்புக் கால்களுக்குச் சுகமாகத் தானிருந்தது".

இதை ஒரு பெண்தான் எழுத முடியும். குந்தவை முழு வெற்றி பெற்றிருக்கிறார்.

(ராயர் காப்பி கிளப் நூலில் இருந்து - கிழக்கு பதிப்பகம் வெளியீடு)

- இரா.முருகன்

4 / 4